1984 பிப்ரவரி 16]

பேரம்பாக்கம் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் துவங்கும் திட்டம்

. 49 (*வினா எண் 18532) திரு. இரா. சண்முகம்; மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பேரம்பாக்கம் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ) பேரம்பாக்கம் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் 6.8.1983-ல் துவங்கப்பட்டு இயங்கி வருகிறது. நெல், நிலக்கடலை, ராகி, கரும்பு, சர்க்கரை, மிளகாய் வத்தல், புளி, பருத்தி மற்றும் முந்திரி ஆகியவைகள் இவ்விற்பனைக்கூடத்தில் விற்கவும், வாங்கவும் வசதி செய்யப்பட்டுள்ளன.

திரு. இரா. சண்முகம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், துவங்கப்பட்டு வியாபாரம் நடந்து வருவதாகச் சொன்னார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னால் இந்தக் கேள்வி அவையிலே அனுமதிக்கப்பட்டிருப்பதை அறிந்து, ஒரு பெயர்ப் பலகையை அங்கே மாட்டியிருக்கிறார்கள். ஆக, அங்கே இப்படிப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, வெகு சீக்கிரத்தில் அதற்கு வேண்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்து, உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து. தலைவர் அவர்களே, எல்லா ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கும் கட்டிடங்கள் இல்லை. பல்வேறு விற்பனைக்கூடங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்க வேண்டியிருக்கின்றன. இப்போது அங்கே தொடங்கப்பட்டிருக்கலாம். விரைவில் அதற்குரிய நிலத்தை ஆர்ஜிதம் செய்து. முறையாகக் கட்டிடம் கட்டி, அதிலே ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தை அமைக்க அரசு ஆவன செய்யும்.

திரு. இரா. சண்முகம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரம்பாக்கம் என் சொந்த கிராமம். அங்கே 10 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அந்தப் புறம்போக்கு நிலத்தை எடுக்காமல், கோவிலுக்குச் சொந்தமான வேறு நிலத்தை எடுத்து, அதற்கென்று ஒரு தனியான கோப்பைத் தயார் செய்து, அது தேக்க நிலையில் இருக்கிறது. ஆகவே. சீக்கிரத்தில் நமக்குச் சொந்தமான அந்தப் புறம்போக்கு நிலத்தை

எடுத்து, வெகுசீக்கிரத்தில் கட்டிடத்தைக் கட்டி, அங்கே ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை நடத்த அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து. தலைவர் அவர்களே, எந்த நிலம் என்பது வருவாய்த் துறையைக் கலந்தாலோசித்து தான் செய்யப்படும்.

திண்டிவனம் தொகுதியில் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் திட்டம்

50 (*வினா எண் 18817) திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதியில் மண்வளப் பாதுகாப்புத் துறையினால் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணி 1983-84 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து. திண்டிவனம் தொகுதியில் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணி 1983-84 நிதி ஆண்டில் அடசல், வடபூண்டி, ஆண்டபட்டு, மூலச்சூர் மற்றும் பழமுக்கல் ஆகிய ஐந்து இடங்களில் மேற்கொள்ளப்பட்டன.

வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி இறக்கும் கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு உதவிப்பணம் வழங்கும் திட்டம்.

51(*வினா எண் 14447) திரு எம். சின்னசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல் உடைக்கும் தொழிலாளர்கள் வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி இறந்தால் உதவிப்பணம் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். இதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன். பேரவைத் தலைவர் அவர்களே, கல் உடைக்கும் தொழிலாளர்களைப் போலவே கிணறுகள் தோண்டுகிற பணியிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களின் பணி மிகக் கடுமையாக இருக்கிற காரணத்தினால் அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்கள் இறந்து போனால் அவர்களுக்கு உதவி செய்யும் திட்டம் ஏதாவது பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். தலைவர் அவர்களே, கேள்வி கல் உடைக்கும் தொழிலாளர்களைப் பற்றியது, தனிக் கேள்வி போடுங்கள். அதற்குச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அந்தச் சட்டத்தில் இதற்கும் வகை இருக்கிறதா என்று பார்க்கச் சொல்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS